இரட்சிக்கப்படுவது எப்படி?

R. ஸ்டான்லி, B.E., M.TECH.,
திருமறைப் போதகராய் மாறிய
ஒரு கட்டிடப் பொறியியலர்

Blessing Youth Mission
8 Church Colony
Vellore 632 006, India
Tel: 00 91 416 2242943, 2248943
<hq@bymonline.org>

HOW TO BE SAVED (Tamil)

Copyright 1985 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006
Tel: 00 91 98437 07600
<stanleyonbible@hotmail.com>

Available in English also.

Printed by
Bapuji Printers, Chennai

1

இரட்சிப்பு என்றால் என்ன?

இரட்சிப்பு என்பது இன்றைய இறைத்தொண்டரின் நவீனக் கண்டுபிடிப்பு அல்ல!

இது முதலாவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் அறிவிக்கப்பட்டது. "இயேசு" என்ற பெயருக்கே "இரட்சகர்" என்பதுதான் பொருள். இவ்வுலகில் இருந்த காலத்தில் இயேசு பல நன்மைகளையும் அற்புதங்களையும் மக்களுக்குச் செய்தார். ஆனால் அவரது பிரதான நோக்கமும் பணியும் நம்மைப் பாவத்திலிருந்து இரட்சிப்பதே. இரட்சிப்பை இயேசுவிலிருந்து பிரிக்க முடியாது.

அடுத்து, இயேசுவின் சீடர் இந்த இரட்சிப்பின் செய்தியை உலகமெங்கும் எடுத்துச் சென்றனர். அவர்கள் கொடுத்த செய்தியைக் கடவுள் அற்புத அடையாளங்களினால் உறுதிப்படுத்தினார்.

இன்று இச்சிறுநூலின் வாயிலாக உங்களுக்கு வருவதும் அதே செய்திதான். திறந்த மனதுடன் வாசியுங்கள். வாசித்து முடிக்குமுன்னதாகவே இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்து விடுவார்.

நீங்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்று சொன் னதும், "அப்படியானால் இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லு

பவர்களெல்லாரும் பாவமே செய்யாமலிருக்கிறார்களோ?" என்பதுதான் பலரும் கேட்கும் கேள்வி. இக்கேள்வி நியாயமானது. விடைதருகிறேன், கவனியுங்கள்.

இரட்சிப்பின் அனுபவம் முக்காலத்திற்கும் உரியது:

- □ கடந்தகால இரட்சிப்பு
- □ நிகழ்கால இரட்சிப்பு
- □ எதிர்கால இரட்சிப்பு

□ கடந்தகால இரட்சிப்பு என்பது பாவத்தின் தண்டனையிலிருந்து (Penalty of Sin) கிடைக்கும் விடுதலையாகும். "பாவத்திற்குக் கிடைக்கும் கூலி சாவு (அதாவது, கடவுளிடமிருந்து நிரந்தரமாய்ப் பிரிக்கப்பட்டுத் தள்ளப்படுதல்); கடவுளுடைய அருட்கொடையோ நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கும் நித்திய வாழ்வு," என்கிறது திருமறை. கடந்தகால இரட்சிப்பானது பாவத்தண்டனையிலிருந்து நம்மை விடுவித்துக் கடவுளோடு ஐக்கியப்படுத்துகிறது.

□ நிகழ்கால இரட்சிப்பு என்பது பாவத்தின் வலிமையிலிருந்து (Power of Sin) கிடைக்கும் விடுதலையாகும். "நீங்கள் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது," என்கிறது வேதம். இரட்சிக்கப்பட்ட பிறகும் சோதனை வரத்தான் செய்யும். ஆனால் இரட்சிக்கப்பட்டவன் தன் சொந்த பலத்தில் சாராமல் கிறிஸ்துவின் கிருபையையும் வல்லமையையுமே சார்ந்திருந்தால் பாவத்தின்மேல் தினமும் வெற்றி அனுபவிப்பான்.

□ எதிர்கால இரட்சிப்பு என்பது பாவத்தின் சூழலிலிருந்தே (Presence of Sin) கிடைக்கும் விடுதலையாகும். இது இவ்வுலகில் அல்ல, விண்ணுலகில் கிடைக்கவிருக்கும் உன்னத ஆசீர்வாதமாகும். அங்கு சாத்தானுக்கு

இடமில்லையாதலால், பாவச் சோதனையோ பாவச் சூழலோ கிடையாது. போராட்டம் இல்லை; என்றென்றும் இளைப் பாறுதல்! விண்ணுலகைக்குறித்து பைபிளில் இப்படி வாசிக்கிறோம்: "நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; கடவு ளுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது... இரட் சிக்கப்படுகிற மக்கள் அதின் வெளிச்சத்திலே நடப் பார்கள்."

பாவத்தைவிட்டு மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது **கடந்தகால** இரட்சிப்பைப் பெறு கிறோம். இயேசுவின்மேல் சார்ந்திருந்து பாவத்தின் மேல் வெற்றிபெறும்போது **நிகழ்கால** இரட்சிப்பை அனு பவிக்கிறோம். விழிப்போடும் விசுவாசத்தோடும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குக் காத்திருக்கும் போது அவர் நம்மை மகிமையில் சேர்த்து **நித்தியகால** இரட்சிப்பை அனுபவிக்க அருள்செய்வார்.

இவ்வளவு பிரமாண்டமான இரட்சிப்பைக் குறித்து நாம் ஏனோதானோ என்று இருக்கலாமா?

இவ்வத்தியாயத்தில் எடுத்தாளப்பட்ட திருவசனங்கள் திருமறையில் காணப்படும் இடங்கள்— எபி 2:3,4; மத் 1:21; 1 தீமோ 1:5; ரோ 6:23,14; வெளி 21:23,24; எபி 9:28.

2

இரட்சிக்கப்பட செய்யவேண்டியது என்ன?

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் நற்செய்திக் கூட்டங்களுக்கும் பிரசங்கங்களுக்கும் பஞ்சமில்லை. ஆன்மீகக் காரியங்களில் அசாதாரணமான தாகம் மக் களிடம் காணப்படுகிறது. உருக்கமான செய்திகளைக் கேட்டுக் கண்ணீர் சிந்துவோர் ஏராளம். ஆனாலும் நமது திருச்சபைகளில் இரட்சிக்கப்பட்டோரது எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இதற்கு ஒரு காரணம், இரட்சிப்பின் அவசியம் வலியுறுத்தப்படுமளவிற்கு இரட்சிப்பை அடையும் வழி விளக்கப்படாததே என்று எண்ணுகிறேன். நண்பரே, நீங்கள் எளிதாக விளங்கக் கூடிய வகையில் இரட்சிக்கப்பட நீங்கள் செய்ய வேண்டியதைச் சொல்லுகிறேன்.

முதலாவது, நீங்கள் உங்களது உண்மையான நிலையை உணரவேண்டும். *"நான் பாவிதான்; ஆனா லும் நீர்..."* என்ற பாடலோடு முன்வந்து இரட்சிக் கப்பட்டோரின் எண்ணிக்கைதான் அதிகம்.

அன்றொரு நாள் இருவர் தேவாலயத்திற்கு ஜெபிக்கச் சென்றனர். ஒருவன் பெருமையடித்துக்கொண்டு கட வுளது முன்னிலையில் தன்னை உயர்த்தினான். பிறரை யும் குறைவாக எண்ணினான். அவனது ஜெபம் அலங் கார வார்த்தைகளால் நிறைந்திருந்தது. அடுத்தவன் அப்படியல்ல. "அவன் தூரத்திலே நின்று, வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல், தன் மார்பில்

அடித்துக்கொண்டு: கடவுளே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான்.'' முதலாமவனல்ல, இவனே கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பினான் என்று இயேசு எடுத்துக்காட்டாகச் சொன்னார்.

நம்மை நல்லவர்களென்று நினைக்கத் தூண்டும் நமது சில நற்குணங்களும் நற்செயல்களுமே நமது இரட்சிப்புக்குப் பெருந்தடையாய் அமைந்துவிடுகின்றன. திருவாக்கினன் ஏசாயா இதை நன்றாய் விவரிக்கிறான்: ''நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நேரிய செயல்களெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கின்றன. நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் தீச்செயல்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகின்றன.''

ஒருவேளை வெளிப்படையான துர்க்குணங்கள் அல்லது தீயநடத்தைகள் நம்மிடம் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் பரிசுத்தராகிய இறைவனுக்கு முன்பாக நீதிமான் ஒருவனுமில்லை. எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்துவிட்டோம். நான் பாவம் செய்யவில்லை, எனக்குள் பாவம் ஒன்றுமில்லை என்று சொல்லுகிறவன், கடவுளையோ, அருட்பணியாளரையோ அல்ல, தன்னையே ஏமாற்றுகிறான் என்று திருமறை கூறுகிறது.

இரண்டாவது, உங்கள் பாவத்திற்குப் பரிகாரி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் என்று விசுவாசித்து அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்.

பாவம் செய்ததால் நாம் கடவுளுக்கு எதிரிகளா னோம். நமக்கும் கடவுளுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்த

இயேசு கிறிஸ்து நடுவராக வந்தார். நம்மை மீட்பதற்காக அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். கல்வாரியின் கொடூரச் சிலுவையில் நமது பாவங்களைச் சுமந்து, நமது அக்கிரமத்திற்காகத் தண்டிக்கப்பட்டார். மாசற்ற அவரது இரத்தம் எல்லாப் பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்தமாக்கும்.

நண்பரே, உங்களுக்காகவே இயேசு சிலுவைக்குச் சென்றார் என்று நம்புங்கள். சிலுவையில் அவரோடு அறையப்பட்ட ஒரு கள்ளன் அவரை விசுவாசித்தபோது அற்புதமாய்ப் பெற்ற மன்னிப்பை நினைவிற்கொள்ளுங்கள்.

''நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்'' என்று சிறையதிகாரி ஒருவன் நடுநடுங்கி இரு தேவ ஊழியரிடம் புகலடைந்தான். ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி'' என்ற உடனடிப் பதிலை விசுவாசித்தது அவனுக்கும் அவன் இல்லத்தாருக்கும் இரட்சிப்பின் மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது.

இரட்சிப்பு ஓர் அதிசயம்! முந்திய விநாடி பாவி; விசுவாசித்ததால் அடுத்த விநாடியே நீதிமான்! முந்திய விநாடி இருள்; அடுத்த விநாடி மகிமையான ஒளி! முந்திய விநாடி பிசாசின் பிள்ளை; அடுத்த விநாடி கடவுளுடைய பிள்ளை! அற்புதங்களிலெல்லாம் அற்புதமாம் இந்த இரட்சிப்பு கிட்டுவது எளிய விசுவாசத்தினாலேயே.

''இயேசு கிறிஸ்துவின் பெயர்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட அத்தனை பேருக்கும் கடவுளுடைய பிள்ளைகளாகும் உரிமையை அவர் கொடுத்தார்.''

மூன்றாவது, உங்கள் இருதய விசுவாசத்தை வாயினால் வெளியே சொல்லவேண்டும்.

திருத்தூதுவராகிய பவுலடியார் ரோம்நகர்வாசிகளுக்கு எழுதிய கடிதத்தில் இதைத் தெளிவாய்க் குறிப்

பிட்டுள்ளார்: "இயேசுவை ஆண்டவர் என நீ வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்."

வாயின் இந்த அறிக்கைக்கும் கடவுளுக்குக் கீழ்ப் படிதலுக்கும் அடையாளமாகத்தான் திருமுழுக்கு ஏற் படுத்தப்பட்டிருக்கிறது. மனந்திரும்பி கடவுளே நீதிபரர் என்று அறிக்கையிட்டவர்களுக்கு திருமுழுக்கினன் யோவான் திருமுழுக்கு கொடுத்தான். மனந்திரும்பி திருவசனத்தை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டவர்களுக்குக் கிறிஸ்துவின் சீடர்கள் திருமுழுக்கு கொடுத்தார்கள். "விசுவாசமுள்ளவனாகி திருமுழுக்கு பெற்றவன் இரட் சிக்கப்படுவான்" என்பது இயேசுவின் தெளிவான போதனை.

பிரியமானவர்களே, திருமறை கூறும் இவ்வழியின்றி வேறு வழியில் நீங்கள் இரட்சிக்கப்படமுடியாது. நமது மார்க்கச் சடங்குகளும், புண்ணியச் செயல்களும் இரட் சிப்பைச் சம்பாதிக்க முடியாதவை. கீழ்க்கண்டவாறு வேண்டுங்கள்—

"கடவுளே, என்னில் நல்லது ஒன்றுமில்லை; நான் ஒரு பாவி; என்மேல் கிருபையாயிரும்; உமது குமார னாகிய இயேசு கிறிஸ்துவை எனது பாவப் பரிகாரி யாகவும் இரட்சகராகவும் இருதயத்தில் விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறேன். எனது விசுவாசத்தை அறிக்கை யிட்டு உமக்குக் கீழ்ப்படிகிறேன். ஆமென்!"

இதுவே இரட்சிப்பின் வழி.

இவ்வத்தியாயத்தில் எடுத்தாளப்பட்ட திருவசனங்கள் திருமறையில் காணப்படும் இடங்கள்—
லூக் 18:13,14; ஏசா 64:6; ரோ 3:10,23; 1 யோ 1:8; 1 தீமோ 2:5,6; ஏசா 53; 1 யோ 1:7; அப் 16:31; யோ 1:12; ரோ 10:9,10; லூக் 7:29; அப் 2:41; மாற் 16:16.

3

இரட்சிப்பின் நிச்சயம் சாத்தியமா?

இவ்வுலகில் இருக்கையிலேயே நான் இரட்சிக்கப் பட்டிருக்கிறேன் என்று நிச்சயமாக எவரும் சொல்லக் கூடுமோ என்பது பலரது கேள்வி.

இரட்சிப்பு என்பது ஒரு தெளிவான, திட்டமான அனுபவமாதலால் இவ்வித நிச்சயம் சாத்தியமே. இரட் சிப்புக்கு இயேசு தந்த இன்னொரு பெயர் மறுபிறப்பு அல்லது ஆன்மீகப் பிறப்பு என்பதாகும். நிக்கொதேமு என்ற யூதப் போதகன் ஒருவனிடம் பேசும்போது மறுபடி யும் பிறப்பதைக் காற்று வீசுவதற்கு இயேசு ஒப்பிட்டார். "காற்றானது விரும்பிய திசையில் வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆனால் அது எங்கிருந்து வருகிறதென்றும் எங்கு போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்த எவனும் அப்படியே இருக்கிறான்" என்றார் அவர். ஆம், இரட்சிப்பின் அனுபவம் நாம் முற்றிலும் விளக்கிக் கூறமுடியாத அளவு மாட்சிமையானதென்றாலும், காற்றைப்போல் அது நிச மானதும், உணரக்கூடியதுமான திட்டமான அனுபவமாகும்.

"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கடவுள் தினமும் திருச்சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" என்று ஆதிச்சபையைக்குறித்து வாசிக்கிறோம். அப்படியானால் நிச்சயமில்லாத அனுபவமாய் இரட்சிப்பு இருப்பது சாத் தியமா?

இரட்சிக்கப்பட்டவன் கடவுளுடைய பிள்ளை. அவன் இறைவனது குடும்பத்தில் உறுப்பினன். இனி அவன் அடிமையல்ல, சொந்தப் பிள்ளை. கடவுளைப் பார்த்து "அப்பா, பிதாவே" என்று உரிமையோடு கூப்பிடும் புத்திர சுவிகார உணர்வு இப்பொழுது அவனுக்குள் வந்து விட்டது. அவன் கடவுளுடைய பிள்ளையாயிருக்கிறா னென்று தூயாவியானவர்தாமே அவனுடைய உள்ளத்தில் சான்றுபகர்கிறார். என்னே நிச்சயம்!

இரட்சிக்கப்பட்ட பலரிடம் நீங்கள் இன்னும் இரட் சிக்கப்படவில்லை என்று சொல்லிப் பிசாசு அவர்களை ஏமாற்றிவைத்திருக்கிறான். இந்தப் பொய்யனும் பொய்க்குத் தந்தையுமானவனால் ஏமாற்றப்பட்டு அடி மைத்தனத்திலேயே மாளுவோர் ஏராளம். பிரியமானவர் களே, இன்றே இந்த வஞ்சக வலையைவிட்டு வெளி வந்துவிடுங்கள்.

மனிதர் தரும் சான்றை ஏற்றுக்கொள்கிறோமே! கடவுள் தரும் சான்று அதைவிட மேலானதன்றோ? இறைமகன் இயேசுமீது நம்பிக்கை கொண்டுள்ளோர் இச்சான்றை தமக்குள் கொண்டிருக்கின்றனர்.

தாங்கள் ஒரு தரிசனம் கண்டதாகவோ, தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட திருவசனம் கிடைத்ததாகவோ அல்லது சத்தம் கேட்டதாகவோ ஒரு சிலர் கூற நீங்கள் கேட்டி ருக்கலாம். எல்லாருக்கும் இவ்விதம் இருக்கவேண்டு மென்று திருமறையில் உபதேசம் கிடையாது; நீங்கள் அவ்விதம் நாடித் தேடவேண்டிய அவசியமுமில்லை. இறைநூலிலுள்ள இரட்சிப்பின் வாக்குறுதிகளும், இருதயத்திலுள்ள தூயாவியானவரின் சான்றும் போது மானவை. இதற்குமேல் எதையாவது தேடுவது நன்றன்று; அது ஆபத்து.

இன்னும் சிலர் தங்கள் உணர்ச்சிகளையே நம்பி அவைகளையே சார்ந்து இருப்பதும் தவறு. பிரிய

மானவர்களே, உணர்ச்சிகள் மாறலாம்; உண்மையோ ஒருபோதும் மாறாது. கீழ்க்கண்ட வரிசைக் கிரமத்தை எப்பொழுதுமே மாற்றிவிடாதிருங்கள்.

முதலாவது சத்தியம்	(Fact)
அடுத்தது விசுவாசம்	(Faith)
கடைசியில்தான் உணர்ச்சிகள்	(Feelings)

இவ்வத்தியாயத்தில் எடுத்தாளப்பட்ட திருவசனங்கள் திருமறையில் காணப்படும் இடங்கள்—
யோ 3:8; அப் 2:47; ரோ 8:15; 16:1; யோ 5:9,10

4

இரட்சிப்பின் அடையாளங்கள் யாவை?

"மரமானது அதின் கனியினால் அறியப்படும்" என்றார் இயேசு. நல்ல மரம் கெட்ட கனி கொடாது. கெட்ட மரம் நல்ல கனி கொடாது. போலி அனுபவங்கள் நிறைந் துள்ள இக்காலத்தில் சரியானதொரு இரட்சிப்பின் அனுபவத்தை எவ்விதம் அடையாளம் கண்டுகொள்ள லாம் என்று இங்கு கவனிப்போம்.

முதலாவது, முந்திய அத்தியாயத்தில் கூறியபடி, இரட்சிக்கப்பட்டவனுக்குப் பரிசுத்த ஆவியானவர் மூலமாக இருதயத்தில் உண்மையான சமாதானமும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

தேவனோடு சமாதானமாகிவிட்டவன் தேவ சமா தானத்தைப் பெறுகிறான். அதை உலகம் தரமுடியா சமாதானம் என்று இயேசு அழைத்தார். அது அவரது சமாதானமேயாம். பாவத்தின் பாரம் நீங்கியது! குற்ற வுணர்வு அகன்றது! அடிமைத்தனம் தொலைந்தது! பயம் பறந்தது! இப்பொழுது சமாதானம் நதியைப்போல் இருதயத்தில் பாய்கிறது. இனி தண்டனைத் தீர்ப்பு இல்லை; நித்திய வாழ்வுதான்.

சந்தோஷம் பொங்குதே, சந்தோஷம் பொங்குதே!
சந்தோஷம் என்னில் பொங்குதே — அல்லேலூயா
இயேசு என்னை இரட்சித்தார்;
முற்றும் என்னை மாற்றினார்;
சந்தோஷம் என்னில் பொங்குதே!

எனும் பாடலை இரட்சிக்கப்பட்டவன் புது அர்த்தத்துடன் பாடத் துவங்குகிறான், அவன் இருதயம் நன்றியால் நிறைகிறது. "தேவா, உமக்கு ஸ்தோத்திரம், ஸ்தோத் திரம்" என்று பரவசத்துடன் கடவுளைத் துதிக்கிறான்.

"மனந்திரும்புகிற ஒரு பாவிக்காக பரலோகத்திலுள்ள தூதர்களிடையே மிகுந்த மகிழ்ச்சி உண்டாகுமென் றார்" இயேசு. அப்படியானால், பூவுலகில் அவனைச் சுற்றியிருக்கும் தூதர்கள் சும்மா இருந்துவிடுவார்களா என்ன?

இரண்டாவது, பாவத்தையும் உலகத்தின் பொல்லாத வழிகளையும் இரட்சிக்கப்பட்டவன் வெறுக்கத் துவங்கு கிறான்.

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதிய படைப் பாயிருக்கிறான்; பழையவை ஒழிந்தன, எல்லாம் புதி தாயின. இவையெல்லாம் கடவுளாலே உண்டாயின."

விருப்பமாய், தாராளமாய், முன் செய்து வந்த பாவச் செயல்கள் இப்பொழுது அவனுக்கு வெறுப்பாய்த் தோன்றுகின்றன. பேரின்பம் பெற்றுவிட்டதால் சிற்றின் பத்தில் நாட்டமில்லை. மனம்போல விரும்பியதையெல் லாம் கட்டுப்பாடின்றி செய்துவந்த அவன் இப்பொழுது, "நான் ஆண்டவருக்குச் சொந்தம், அவருக்கு அடிமை" எனக் கூறிப் பிசாசின் தூண்டுதலுக்கும் பாவத்தின் கவர்ச்சிக்கும் "இல்லை" என்று பதில் சொல்லிவிடு கிறான்.

பொல்லாதவரின் சொற்படி நடக்கவும், பாவி களின் தீய வழியில் நிற்கவும், இகழ்வாரின் குழுவில் அமரவும் இப்பொழுது அவனுக்கு விருப்பமுமில்லை, நேரமு மில்லை.

இப்படிச் சொல்லுவதால் அவன் பாவம் எதுவுமே செய்யமாட்டான் என்று பொருளல்ல. இரட்சிக்கப்படு முன் அவன் ஒரு பன்றியைப் போலிருந்தான். சாக்கடை என்றால் அவ்வளவு பிரியம். அதிலேயே கிடப்பான். இப் பொழுது அவன் ஓர் ஆட்டுக்குட்டியாகிவிட்டான். யாராவது ஆட்டுக்குட்டியைப் பிடித்துச் சகதியில் தள்ளி விட்டாலும், அது உடனே கதறிக்கொண்டு வெளியே வந்துவிடும். மேய்ப்பன் அதைக் கழுவிவிடுவான். இது தான் வேறுபாடு. புரிந்துவிட்டதா?

மூன்றாவது, திருமறைத் தியானத்தின்மீது இரட் சிக்கப்பட்டவனுக்கு ஒரு தனிப்பிரியம் உண்டாகும்.

ஏதோ கடமைக்காக ஒரு சில திருவசனங்களைத் தினமும் வாசிக்கும் பழக்கம் போய், வேதத்தை மணிக் கணக்காய் உட்கார்ந்து தியானிக்க வேண்டும் என்ற வாஞ்சை உண்டாகிறது. பால் விரும்பும் குழந்தையைப் போல் திருவசனத்தை விரும்பிச் சுவைக்கிறான். வேதத் தின் ஒவ்வொரு பக்கமும் கடவுளே நேரடியாக அவனோடு பேசுவதுபோல் இருக்கிறது. பல பகுதிகள் அவனுக்கு முதலிலேயே விளங்கிவிடுவதில்லை; ஆனால் திருவசனத் தில் விருப்பம் தணிவதில்லை, விசுவாசம் குறைவதில்லை. இதற்குக் காரணம் தெரியுமா? "அழி வுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் உயிருள்ளதுமான திருவசனமாகிய அழிவில்லாத வித்தினாலேயே" அவன் மறுபடியும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறான்.

நான்காவது, இறைவேண்டலில் அவனுக்கு உற்சாகம் கூடுகிறது.

ஜெபம் என்பது இப்பொழுது அவனுக்கு மூச்சு போலாகிவிடுகிறது. முன்பு அவன் கடவுளை அறிய வில்லை. இப்பொழுது அவர் அவனுக்கு அப்பாவாகி விட்டாரே. அவரோடு பேச அத்தனை விருப்பம்! *"ஜெபமே ஜெயம்"* என்று ஆண்டாண்டாக சுவரில்

தொங்கிய வாசகம் இப்பொழுதுதான் அவனுக்குப் புரிகிறது. முன்பெல்லாம் ஐந்து நிமிடம் ஜெபிக்கச் சொன் னாலும் வார்த்தையும் வராது, காரியமும் இருக்காது. இப்போதோ தூயாவியானவர் அவனுக்கு உதவி செய்வ தால், வல்லமையாக, ஊக்கமாக, நெடுநேரம் ஜெபிக் கவும் கற்றுக்கொள்ளுகிறான். மீனுக்குத் தண்ணீர் எப் படியோ அப்படியே இரட்சிக்கப்பட்டவனுக்கு ஜெபமும். ஆண்டவரைச் சந்தித்த பவுலுக்குத் தொடர் ஊழியம் செய்ய அவரது கட்டளை பெற்ற அனனியா என்ற சீடன் பயத்தினால் தயங்கி நின்றபோது, பவுல் மனந் திரும்பிவிட்டான் என்பதற்கு அடையாளமாக ஆண்ட வர் அனனியாவிடம் சொன்னது, "அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்" என்பதே!

ஐந்தாவது, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட வர்களோடு உறவுகொள்ள அவன் விரும்புவான்.

இனம் இனத்தோடு சேரும் என்பார்கள். இவ்வுலகில் இரண்டே இனம்தான் உண்டு: இரட்சிக்கப்பட்டோர், இரட்சிக்கப்படாதோர்; கடவுளின் பிள்ளைகள், பிசாசின் பிள்ளைகள்; பரலோகக் குடிமக்கள், நரகம் செல்லு வோர். இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டத்திற்கே திருச் சபை என்று பெயர். இதை அப்போஸ்தலர் 2:47இல் காண்கிறோம். "திருச்சபை என்றால் என்ன?" என்றார் ஒருவர். "அதற்கு வெளியே பரிசுத்தவான்கள் கிடை யாது; அதற்கு உள்ளே பாவிகள் கிடையாது; அதுவே திருச்சபை!" என்று வந்தது பதில். என்னே வரையறை! இரட்சிக்கப்பட்டவுடன் கடவுளின் அன்பை நாம் உணர்ந்து அறியத் துவங்கத்தான் செய்கிறோம். அந்த அன்பின் நீளம், உயரம், அகலம், ஆழம் ஆகியவற்றை அறிய பரிசுத்தவான்களின் கூட்டு அத்தியாவசியம்.

ஆறாவது, இரட்சிக்கப்பட்டவன் பிறர்மீது அன்புடனும் பாசத்துடனும் நடந்துகொள்ளுவான். தவறிழைத்த வரோடு காரியங்களைச் சரிசெய்வான்.

இருதயத்தில் ஊற்றப்பட்ட தேவ அன்பினால் பிற ரையும் பயன் கருதாது நாம் நேசிக்கத் துவங்குகிறோம். விரோதிக்கிறவர்களையும், துன்புறுத்துவோரையும், எதிர்க்கிறவர்களையும் நேசிப்பதே பரந்த இதயமுடைய அதே விண்தந்தைக்கு நாம் பிள்ளைகள் என்பதற்கு நிரூபணமாகும். கடவுளிடம் அன்புகூருவது முதல் கட்டளையானால் மனிதரிடம் அன்புகூருவது அதற்கிணை யான இரண்டாம் கட்டளையாகும்.

இரட்சிப்பில் கிறிஸ்துவின் இரத்தத்தால் தூய்மை யாக்கப்பட்ட மனச்சாட்சியைப் பெற்றுக்கொண்டவன் அம்மனச்சாட்சியைக் கடவுளுக்கு முன்பாக மட்டுமல்ல மனிதருக்கு முன்பாகவும் குற்றமற்றதாகக் காத்துக் கொள்ள முயற்சிக்கவேண்டும். கடவுளுக்குக் காணிக்கை செலுத்துமுன் முதலாவது தவறிழைக்கப்பட்டவர்களோடு ஒப்புரவாகவேண்டுமென்று இயேசு தெளிவாகப் போதித் தார். இயேசு தனது வீட்டிற்குள் நுழைய வரும்போதே சகேயு என்ற வரிக்காரன் வாசலில் நின்று மனிதரோடு தான் சரிசெய்யவேண்டிய யாவற்றையும் சரிசெய்துவிடுவ தாக வாக்குப்பண்ணினான். உடனே இயேசு அவனைப் பார்த்து, "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" என்றார்.

ஏழாவது, இரட்சிக்கப்பட்டவன் தான் பெற்ற இரட் சிப்பின் மகிழ்ச்சியைப் பிறரோடும் பகிர்ந்துகொள்ளத் துடிப்பான்.

"விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக் காமல் அதை விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்" என்றார் இயேசு. "யாம் பெற்ற இன்பம் பெருக இவ் வையகம்" என்பார் சான்றோர்.

சமாரிய நாட்டுப் பெண்ணொருத்திக்கு ஐந்து கண வர் இருந்தனர். அப்பொழுது அவளோடு இருந்தவனும்

அவளது முறையான கணவனல்ல. ஊரில் அவளது மதிப்புத்தான் எப்படி இருந்திருக்கும்! ஆனால் இயேசு அவளைச் சந்தித்தவுடன் அவள் புதிய படைப்பானாள். கிணற்றில் தண்ணீர் இறைக்க வந்த அவள் குடத்தை யும் அங்கேயே வைத்துவிட்டு ஊருக்குள் ஓடினாள். தன்னை முன்பு அறிந்தவர்கள் என்ன நினைப்பார் களென்று சற்றும் சிந்தித்தாளில்லை. கிராமம் முழு வதையுமே திரட்டி வந்துவிட்டாள் இயேசுவிடம்! இதுதான் சாட்சி பகருதல் என்பது.

திருப்பாடகன் தாவீது தன் அனுபவத்தை இவ்விதம் வர்ணிக்கிறான்: "பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து என் காலடி களைக் கற்பாறையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது கடவுளைத் துதிக்கும் புதுப்பாடலை ஆண்டவர் என் வாயிலே கொடுத்தார்; அநேகர் அதைக் கண்டு, பயந்து, ஆண்டவரை நம்புவார்கள்."

இந்நூல் உங்களுக்குப் பயனளித்திருக்குமானால் உங்கள் நண்பர் ஒருவருக்கு இதை அன்பளியுங்கள். இப்படித்தான் நீங்கள் மற்றவர்களுக்கு ஓர் ஆசீர்வாத வாய்க்காலாய் மாறலாம்.

இவ்வத்தியாயத்தில் எடுத்தாளப்பட்ட திருவசனங்கள் திருமறையில் காணப்படும் இடங்கள்—
லூக் 6:43,44; யோ 4:27; ரோ 8:1; லூக் 15;10; 2 கொரி 5:17,18; யோ 8:34-36; சங் 1:1; 1 பேது 2:1-3; ரோ 8:26; அப் 9:11; மத் 5:44,45; 22:37-39; அப் 24:16; மத் 5:23,24; லூக் 19:8,9; யோ 4:28-30; சங் 40:2,3.

5

இன்னும் கேள்விகள் உண்டா?

முந்திய அத்தியாயங்களை வாசித்தது இரட்சிப்பின் அனுபவத்தை நன்கு விளங்கிக்கொள்ள உங்களுக்குப் பெரிதும் உதவியிருக்குமென நம்புகிறேன். இதிலும் எளிதாக விளக்குவது கடினமே. ஆனாலும், இரட்சிப்பின் செய்தியைக் கேட்ட பின்னர் பலரும் கேட்கும் கேள்விகள் இன்னும் உண்டு. "எனது கேள்விகள் அனைத்திற்கும் திருப்தியான பதில் பெற்றுக்கொண்ட பின்னரே நான் இரட்சிக்கப்படுவேன்" என்று சொல்லுபவர்கள் இரட்சிக்கப்படாமல் போவது கிட்டத்தட்ட நிச்சயம். ஏனெனில் வெறும் தலையறிவு ஒருவனை இரட்சித்து விடாது.

சிறுவனொருவன் ஒரு காட்டில் கதறிக் கதறி, "ஆண்டவரே, ஓர் அடி இறக்கும், ஓர் அடி இறக்கும்" என்று வேண்டிக்கொண்டிருந்தான். வயோதிபப் போதகர் ஒருவர் ஒன்றும் புரியாமல் சிறுவனிடம் விபரம் கேட்டார். "எனது அப்பாவுக்காக வேண்டினேன்" என்றான் அவன். இன்னும் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறுவன் தொடர்ந்தான், "என் அப்பாவுக்கு திருமறை முழுக்க முழுக்கத் தெரியும்; ஆனால் எல்லாமே தலையறிவுதான். அந்த அறிவு ஓர் அடி இறங்கி இருதயத்திற்கு வந்து அனுபவமாகவேண்டும் என்றே வேண்டினேன்."

மின்சாரத்தைப்பற்றி முழுவதும் விளங்கும்வரை மின்விளக்கைப் பயன்படுத்தமாட்டேன் என்று சொல்லுவது

மடமையல்லவா? கரும்பு ருசி கழுதைக்குத் தெரியாது; அது வெறும் கட்டை என்று போய்விடும். "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்!" என்கிறது சத்திய வேதம்.

பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கும், சொல்லப்படும் சாக்குப்போக்குகளுக்கும் இதோ திரு மறையிலிருந்து விடைகள்:

1. எனது மார்க்கம் எனக்குப் போதாதா?

"நீங்கள் மனந்திரும்பிச் சிறுவர்களைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் நுழையமாட்டீர்கள்" (மத் 18:3)

"நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான்... நியாயப்பிரமாணத்துக்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன். ஆனாலும், எனக்கு இலாபமாயிருந்த வைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக இழப்பென்று எண்ணுகிறேன்" (பிலி 3:5-7,11)

2. நான் யாருக்கும் அநியாயம் செய்யாமல், முடிந்த அளவு நல்லதையே செய்துவந்தால் போதாதா?

"நீங்கள் மனிதர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள். கடவுளோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனிதருக்குள்ளே பெருமையாக எண்ணப்படுவது கடவுளுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" (லூக் 16:15)

"ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கடைப்பிடித்துவந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (யாக் 2:10)

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது கடவுளுடைய ஈவு; ஒருவரும் பெருமையடித்துக் கொள்ளாதபடி இது மனிதனுடைய செயல்களினால் உண்டானதல்ல" (எபே 2:8,9).

3. அன்புள்ள கடவுள் யாரையும் நித்திய நரகத்திற்கு அனுப்புவாரோ?

"இடுக்கமான வாசல் வழியாய் நுழையுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் நுழைகிறவர்கள் அநேகர்" (மத் 7:13)

"அரசன் தனது வேலைக்காரரைப் பார்த்து: (கலியாண வைபவச் சிறப்புடை அணிந்திராத) இவனைக் கையும் காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்" (மத் 22:13)

4. இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று மாய்மாலம் பண்ணுகிறவர்களைவிட என்னைப்போல சும்மா இருந்துவிடுவது நலமன்றோ?

"உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, கடவுளுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும். கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. கடவுள் அவனவனுடைய செயல்களுக்குத்தக்கதாக அவனவனுக்குப் பதில் செய்வார்... கடவுளிடத்தில் பாரபட்சமில்லை... இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனிதருடைய இரகசியங்களைக் குறித்துக் கடவுள் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாளிலே இது விளங்கும்" (ரோ 2:5,6,11,16)

5. கிறிஸ்தவ வாழ்க்கை அவ்வளவு சுலபமா? என்னால் மன்னிக்க முடியாதவர்கள், விடமுடியாத பழக்கங்கள் எல்லாம் ஏராளம் உண்டே!

இயேசு சொன்னது: "வருந்திப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்... என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்... என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாய் இருக்கிறது" (மத் 11:28-30)

"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு" (பிலி 4:13)

6. கடவுள் தாம் விரும்புகிற வேளையில் என்னை இரட்சிக்கட்டுமே!

"கடவுளுடைய கிருபையை நீங்கள் வீணாய்ப் பெறாதபடிக்கு, உடன் பணியாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்... இதோ, இதுவே தகுந்த காலம்; இன்றே மீட்பின் நாள்" (2 கொரி 6:1,2)

6

எனது அனுபவத்தைச் சொல்லட்டுமா?

தமிழகத்தின் தென்பகுதியில் நெல்லை மாவட்டத்திலுள்ள நாசரேத் என்னும் சிற்றூரில் தாயார் அன்பு அம்மாளுக்கும் தந்தையார் இராஜாமணி அவர்களுக்கும் இரண்டு மகன்களில் முதல்வனாகப் பிறந்தேன். தாயார் ஓர் ஆசிரியை; தந்தை ஓர் இராணுவ அதிகாரி. கிறிஸ்தவ இல்லம். கண்டிப்பான வளர்ப்பு. எளிய பின்னணி. சினிமா, கதைப் புத்தகங்கள் போன்றவற்றிற்கு வீட்டில் இடமே கிடையாது. ஆலய ஆராதனை அத்தனையிலும் பங்கேற்பு. தினம் காலையில் ஒரு வசன மாவது மனனம் செய்யாமல் காலைச் சிற்றுண்டியை அம்மா தரமாட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை வந்தால் இன்னும் சங்கடம்! ஒரு முழுச் சங்கீதம் ஒப்புவிக்காமல் மதிய உணவு கிடையாது. இது தவிர்த்து சுருக்க ஜெபங் கள் மனனம் வேறு. வேதபாடப் பரீட்சைகளிலெல்லாம் பரிசுதான். வகுப்பில் முதல் மாணவன். சில சமயங்களில் தான் இரண்டாவது இடம். ஆசிரியருக்குப் பிரியம். தலைமையாசிரியருக்குச் செல்லமாதலால் "ஐயாப் பிள்ளை" என்று பட்டப்பெயர்! தங்கள் பிள்ளைகளைப் பெற்றோர் கண்டிக்கும்போது அன்பக்கா பிள்ளை களைப் பாருங்கள் என்றுதான் அடிவிழும். டாக்டர் வேதபோதகம் அம்மையார் அவர்களுக்கு ஞானப்பிள்ளை. இராணுவத்தில் ஸ்டான்லி என்றிருந்த ஒரு வீரனையும், தேவ ஊழியன் ஸ்டான்லி ஜோன்ஸ் அவர்களையும் நினைவில் வைத்து அவ்வாறே வரவேண்டுமென்று அப்பெயரையே எனக்கு வைத்தார்களாம். ஆனால்...

வெளியே நல்லவனாகத் தோன்றினாலும் உள்ளே பாவங்கள் ஏராளம். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். உடன் மாணவர், நண்பர் பலரைவிடப் பரவாயில்லைதான். ஆனால் உள்ளத்தைத் திறந்துபார்த்தால்தான் தெரியும் உண்மை. இரட்சிக்கப் பட்டிருக்கிறாயா, மறுபடி பிறந்திருக்கிறாயா எனும் கேள்விகளெல்லாம் கொஞ்சமும் பிடிக்காது. ஆனால் எனக்கு ஆசிரியராயிருந்த மைக்கேல் செல்லத்துரை, ஞானதுரை போன்ற பக்தர்கள் பல்லாண்டாய் என்னை ஆண்டவருக்காய் உரிமைபாராட்டி ஜெபித்துவந்திருக் கிறார்கள். எனக்கு அது தெரியாது.

ஞானதுரை அண்ணனிடம் வழியில் ஒரு நாள் மாட்டிக்கொண்டேன்! என்ன, எப்படி என்றார். புரிந்து விட்டேன் என்ன கேட்கிறார் என்று! மழுப்பிவிட்டுத் தப்பிவிட முயன்றேன். ஆனால் அன்று தோல்வி! பாக் கெட்டில் வைத்திருந்த புதிய ஏற்பாட்டைத் திறந்துவிட் டார். எனக்குக் கதிகலங்கிவிட்டது. அதுவும் கலாத்தியர் 5:19-21ஐ வாசித்துவிட்டார். ஆனாலும் தாக்குப்பிடித்துப் பார்த்தேன். விபசாரம், கொலை எல்லாம் செய்யவில்லை என்று வாதித்தேன். விட்டாரில்லை. இச்சையான பார் வையே விபசாரம்; பகையே கொலை; இப்படி ஒவ்வொன் றாய் விளக்க ஆரம்பித்தார். தலை கவிழ்ந்தேன். "இன் றிரவு வீட்டில் முழங்காலிட்டுக் கடவுளிடம் உன் நிலை யை உண்மையாய் அறிக்கையிடு" என்று சொல்லிப் போனார். அன்று வெள்ளிக்கிழமை. சாப்பாட்டில் மன மில்லை. அம்மாவின் அனுமதியுடன் இரவு சாப்பிடாமல் கடவுளிடம் என்னைத் தாழ்த்தி ஜெபித்தேன். என்றோ செய்த என்னென்ன பாவங்களெல்லாமோ ஒவ்வொன் றாய் நினைவுக்கு வரத் துவங்கின. "ஆண்டவரே, நான் நல்லவன் என்று இனிச் சொல்லமாட்டேன். எத்தனை பாவங்கள்! மன்னியும், ஆண்டவரே! என் பாவங்களுக் காகத்தானே இயேசுவின் கரங்களும், கால்களும்

ஆணிகளால் கடாவப்பட்டன. என்மேல் கிருபையாயிரும்'' என்று கதறினேன்.

அடுத்த நாள் கல்லூரிக்குச் செல்லவேண்டிய திருந்தது. அப்பொழுது எனக்கு வயது 16. ஆண்டு 1962. பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரியில் புதுமுக வகுப்பு (PUC) படித்துக்கொண்டிருந்தேன். வீட்டின் எளிய நிலையால் விடுதியில் தங்கிப் படிக்க இயலாது நாசரேத்திலிருந்து தினமும் ரயிலில் போய் வந்து படித்தேன். ஞாயிற்றுக்கிழமை வந்தது. கிறிஸ்தி யான் உவைஸ் என்ற மறைந்த பக்தன் எழுதிய *உத்தம கிறிஸ்தவன்* என்ற புத்தகம் எப்படியோ கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு தேரி என்றழைக்கப்படும் பனை மரங்கள் நிறைந்த செம்மண் காட்டிற்குச் சென்றேன். முழங்காலில் நின்று அப்புத்தகத்தைப் படிக்கத் துவங் கினேன். இரண்டாம் அத்தியாயத்திற்குக்கூட வந்திருக்க மாட்டேன். தூயாவியானவரின் சாட்சி உள்ளத்தில் பலமாய் வந்ததை உணர்ந்தேன். அப்புத்தகத்தில் வாசித்த திரு வசனங்கள் அவ்வளவு அழகாய்ப் பாவ மன்னிப்பின் நிச்சயத்தை இருதயத்தில் ஊன்றிவிட்டன. குதித்தெழுந் தேன். அண்ணன்மாரிடமெல்லாம் சொன்னேன். அம்மா வுக்கு ஒரே ஆனந்தம்.

இயேசு உள்ளில் வந்ததும் பகையுணர்வும் வைராக் கியமும் தகர்ந்தன. மாணவப் பருவத்தில் எதிரிகளெல் லாம் படிப்பில் நம்மோடு போட்டிபோடுகிறவர்கள்தானே. சிலரோடெல்லாம் நெடுநாள் பேசாமலே இருந்தேன். இப்போது நான் புதிய மனிதனாகிவிட்டேனே. அவர் களிடம் விரைந்தேன். ஒவ்வொருவரையும் சந்தித்துக் கைகுலுக்கி ஒப்புரவானேன். வெட்கம் எனும் மறுபெயர் கொண்ட பெருமையைக் கிறிஸ்துவின் உதவிகொண்டு மிதித்ததாலேயே அவ்விதம் செய்ய முடிந்தது. மனச்சாட்சி சுத்தமானது. சாட்சி பகர ஆரம்பித்தேன். திருமறைத்

தியானமும் ஜெபமும் இன்ப வேளையாயிற்று. அதே காட்டில் ஒருநாள் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது பரிசுத்த ஆவியானவரின் நிறைவுபெற்றேன். சோதனை களை மேற்கொள்ள ஆவியானவர் பலம் தந்தார். வெற்றி வாழ்க்கை சாத்தியமாயிற்று.

இவ்வனுபவம் பெற்று இப்பொழுது (2013) ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகின்றது. கிறிஸ்துவைப் பின்பற்ற அன்று எடுத்த அந்த எளிய தீர்மானத்தைக் குறித்து என்றுமே துக்கப்பட்டது கிடையாது. மாறாக, பலமுறை என் படுக்கையருகில் முழங்காலிட்டு அன்று என்னைச் சந்தித்த இறையருளை நினைத்து நன்றிக் கண்ணீர் வடித்திருக்கிறேன். நண்பரே, ஒன்று சொல்லி முடிக் கிறேன்—

வாழ்வு ஒன்றே,
கழியும் சீக்கிரமே;
கிறிஸ்துவுக்காய்ச் செய்ததே
நிலைக்கும் என்றுமே!

<u>மாதிரி ஜெபங்கள்</u>

அடுத்துவரும் நான்கு பக்கங்களில் தினமும், காலையும் மாலையும், நீங்கள் எப்படி ஜெபிக்கவேண்டு மென்று மாதிரி வேண்டல்கள் தரப்பட்டுள்ளன. அவ்வப் போது உங்களது தனிப்பட்ட, குறிப்பான, தேவைகளையும் இவற்றோடு சேர்த்துக்கொள்ளுங்கள். நாளடைவில் நீங்களாகவே உங்கள் சொந்த வார்த்தைகளில் கடவுளிடம் உங்கள் இதயத்தைத் திறந்து கொட்டிவிடப் பழகுவீர்கள்.

காலை வேண்டல்

அந்தந்த நாளுக்குத் தேவையான
கிருபையையும் பலத்தையும் அருளுகிறவரே,
கடந்த இராமுழுதும் நல்ல இளைப்பாறுதல் தந்து
காலையில் களிப்புடன் எழுந்திருக்கச் செய்ததற்காய்
உம்மைத் துதிக்கிறோம். இது நீர் எங்களுக்கென்று
ஏற்படுத்திய நாள்; இதிலே நாங்கள்
மகிழ்ந்து களிகூர உதவியருளும்.

எங்களைவிட நல்லோர் பலர் இவ்வுலகைவிட்டு என்றோ
போயிருக்க, நீர் இன்னொரு நாளை
எங்கள் வாழ்வில் கூட்டிக்கொடுத்ததற்காய்,
தேவனே, உம்மைத் துதிக்கிறோம்.
இந்த நாளில் சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும்
உமக்குப் பிரியமாய் நடந்துகொள்ள எங்களுக்கு
உதவியருளும். பிசாசானவன் எங்களுக்கு எதிராக
வைத்திருக்கும் கண்ணிகளைக் கண்டுகொள்ள
நாங்கள் விழிப்பாயிருக்க அருள்புரியும்.
வீட்டிலும், வெளியிலும், வேலைத் தலத்திலும் உமது
திருமகன் இயேசுவுக்குச் சாட்சிகளாய்த் திகழ
எங்களைப் பலப்படுத்தும். தூயாவியானவரின்
கனிகளால் எங்களை அலங்கரியும்.

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே,
இந்த நாளில் எங்களுக்குத் தேவையான உணவு, உடை
தந்து ஆதரியும். நாங்கள் கையிட்டுச் செய்யும் எல்லா
வேலைகளிலும் உமது ஆசீர்வாதம் தங்கியிருக்கட்டும்.
எல்லா ஆபத்து, விபத்து, நாசமோசங்களுக்கு
எங்களை விலக்கிக் காத்துக்கொள்ளும்.
உமது விண்தூதரின் பாதுகாப்பு எப்பொழுதும்
எங்களைச் சுற்றியிருக்கட்டும்.
எங்களுக்கு விரோதமாய்த் தீட்டப்படும் திட்டங்கள்
ஒன்றுமில்லாமல் போகட்டும்.

எங்களை எதிர்க்கிறவர்களையும் நேசிக்கும்படி
உமது அன்பினால் எங்களை நிரப்பிவிடும்.
எங்கள் பொறுமையை இழக்க ஏற்படும் சோதனைகளை
மேற்கொள்ள மனவலிமை தாரும். எவரையும்
புறங்கூறாதிருக்க எங்கள் நாவுகளை நாங்கள்
கட்டுப்படுத்தட்டும். தேவையற்ற காரியங்களில்
தலையிடாதபடி எங்களைத் தடுத்து நிறுத்தும்.

பூரண சற்குணரே,
யாருக்கும் தீமைக்குத் தீமை செய்யாமல்
நல்லது செய்து தீயதை முறியடிக்கக் கற்றுத்தாரும்.
இன்று ஒருவருக்காவது கிறிஸ்துவில் வெளிப்பட்ட
உமது அன்பைப் பகிர்ந்துகொள்ள வழிநடத்தும்.
சிடுசிடு என்றிராமல் எப்பொழுதும்
புன்முறுவலுடன் காணப்பட உதவி தாரும்.

சர்வ வல்லவரே,
இன்றைய வேலைகளுக்கும் பொறுப்புகளுக்கும்
தேவையான சக்தி என்னில் இல்லை. என்னைப்
பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும்
செய்ய எனக்கு வலிமையுண்டு என்ற நம்பிக்கையில்
இந்த நாளில் காலெடுத்துவைக்கிறேன்.
அப்படியே ஆகட்டும், ஆண்டவரே, ஆமென்!

மாலை வேண்டல்

இரவையும் பகலையும் உண்டாக்கி,
இரவிலே நிலவோ பகலில் வெயிலோ எங்களைச்
சேதப்படுத்துவதில்லை என்று வாக்களித்தவரே,
இந்த நாள் முழுவதும் நீர் எங்களோடிருந்து எங்களை
வழிநடத்தி மாலைப்பொழுதிற்குக் கொண்டுவந்ததற்காய்
உம்மைத் துதிக்கிறோம். இந்நாளில் சிந்தையிலும்,
சொல்லிலும், செயலிலும்
உமக்கு விரோதமாக நாங்கள் செய்த பாவங்களை
எங்களுக்கு உணர்த்தி எங்களை மன்னியும்.
திரும்பத் திரும்ப இத்தவறுகளை நாங்கள்
செய்யாதிருக்கட்டும்.

நீதியுள்ள நியாயாதிபதியே,
இந்த நாளில் நாங்கள் செய்துமுடித்த எல்லா
வேலைகளுக்கும் ஏற்ற பலனை எங்களுக்குத் தாரும்.
முழுபலத்துடன் அல்லாது அரைமனதுடன் நாங்கள்
செய்த பொறுப்புப் பணிகளிலுள்ள குறைபாடுகளுக்காக
எங்கள்மீது பொறுமையாயிரும்.
எவரையாவது நாங்கள் புண்படுத்தியிருந்தால் எங்களை
மன்னியும். நாளைக்கே அவர்களிடம் சென்று
மன்னிப்புக்கோருவதற்கான தாழ்மையுள்ள மனதைத்
தாரும். சூரியன் மறையுமுன் எங்கள் கோபங்கள்
தணிந்துவிடவேண்டுமென்று சொல்லியிருக்கிறீரே!

இந்த நாளின் அனைத்து ஆசீர்வாதங்களுக்காய்
உம்மைப் போற்றுகிறோம், தேவா.
உணவு அளித்தீர், உடை தந்தீர், உறைவிடம் கொடுத்தீர்,
உடல்நலம் அருளினீர், உறவுகள் ஏற்படுத்தினீர்,
உற்சாகம் ஊட்டினீர்— எண்ணிலடங்கா ஸ்தோத்திரம்,
தேவா, என்னென்று நான் பாடுவேன்; இந்நாளிலே,
என் வாழ்விலே, நீர் செய்த நன்மைக்கே!

ஆறுதலின் தேவனே,
இந்த நாளில் இறப்புகள், இழப்புகள், இன்னல்கள்,
இக்கட்டுகள், இம்சைகள், இன்னும் இது போன்றவற்றால்
புலம்பிக் கதறிக்கொண்டிருப்போருக்காய்
ஜெபிக்கிறோம். அவர்களுக்குத் தேவையான உமது
கிருபையையும் மனிதர் தயவையும் நிரம்பத் தாரும்.
நீர் எங்களுக்குப் பாராட்டும் அன்புக்கு
நாங்கள் தகுதியுள்ளவர்கள் அல்லவே.
"அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்?"
எனப் பாடிக்கொண்டே படுக்கைக்குச் செல்லுகிறோம்.

உறங்காமலும் தூங்காமலும் எங்களைக் காக்கிறவரே,
எங்கள் ஆவி, ஆன்மா, உடல் யாவற்றையும்
இந்த வேளை உம்மிடம் ஒப்படைக்கிறோம்.
கண்மணியைப்போல எங்களைக் காத்தருளும்.
உமது திருப்பிரசன்னத்தால் எங்களைத் திருப்தியாக்கி
உமது முகப்பிரகாசத்தில் காலை விழிப்பைத் தாரும்.
இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றும்
உம்முடையவைகளே, ஆமென்!

கிறிஸ்தவ வாழ்வில்
நிறைவாய் வளர உணவளிக்கும்
ஒரு தினசரித் தியான நூல்...



சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.

அனைத்துச் சபையினரும்...
அனைத்து வயதினரும்...
அனைத்துத் துறையினரும்...
விரும்பி வாசிக்கும்
ஒரு புதிய படைப்பு!

432 பக்கங்கள்
விலை ரூ. 150/– அனுப்பச் செலவு ரூ. 30/–

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.

கிடைக்குமிடம்:

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>

StanleyOnBible.com

A WEBSITE FOR BIBLE LOVERS

CONTENTS

- ***My Letters***
  Stanley talks heart to heart
  with the Visitors of this Website.
- ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for
  Personal Meditation and Pulpit Preaching
- ***Bible Studies***
  Studies on specific themes
  and select books of the Bible
- ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold
  Sound Doctrines of the Bible
- ***Youth Matters***
  Practical Guidelines to Young Men
  and Young Women for Successful Living
- ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons
  on Christian Leadership
- ***Missionary Challenge***
  Calling Christians to obey
  the Great Commission of Christ
- ***My Answers***
  Answers to Questions
  frequently asked but rarely answered
- ***Quotable Quotes***
  Stanley's analytical Statements
  about Christian Life and Ministry

Register your e-mail id in this website
to receive updates instantly.